R4797

## GIANTS IN THE EARTH
# பூமியில் இராட்சதர்கள்

"நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்." லூக்கா 17:26

நோவாவின் நாட்களில் நடந்தது போல அவருடைய பிரசன்ன காலத்தில், யுக முடிவில் நடக்கும் என்று நமது கர்த்தரின் அறிக்கையை கவனிக்கும் போது, அவரது பிரசன்னத்தை உலகம் அறியாது என்பது கவனிக்கப்பட வேண்டும். ஏனெனில் இந்த குறிப்பிட்ட வசனம் கீழ்க்கண்டவாறு வருகிறது. "ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்தில் .... ஜனங்கள் புசித்தும், குடித்தும், பெண் கொண்டும் பெண் கொடுத்தும் ......... உணராதிருந்தார்கள். இப்படியே மனுஷகுமாரன் வரும் (பிரசன்னம் - பரவுசியா) காலத்திலும் நடக்கும்." (மத்தேயு 24:37-39)

இந்த அறிக்கை புசித்தல், குடித்தல் முதலானவைகளை தவறு என்று குறிப்பிடாமல், யுக முடிவின் நெருக்கடியில் எந்தவித தொந்திரவையும் மனிதன் அறியமாட்டான் என்பதே. ஜலப்பிரளய காலத்தில், முதல் யுகத்தின் முடிவில் ஒரு பெரிய ஆபத்து வரப்போகிறது என்கிற ஒரு அறிகுறியே இல்லாதிருந்தது. அப்பொழுது பேரிடர் தவிர்க்க முடியாததாக இருந்தது போல, இப்பொழுதும் அது தவிர்க்க முடியாததாக இருக்கிறது என்று கர்த்தர் நமக்கு கூறுகிறார்.

முதல் உலகத்தின் முடிவும் தற்கால உலகத்தின் முடிவும் ஆச்சரியப்படத்தக்கதாக ஒரே மாதிரி இருக்கிறது. முதல் உலகத்தின் முடிவுக்கு முன்னால் (தேவ தூதர்களின்) மனித சக்தியை மீறிய செல்வாக்கு இருந்தது. தூதர்களின் வல்லமையினால் மிகவும் விரும்பப்படத்தகாத நிலைமைகள் உண்டாக்கப்பட்டிருந்தன. ஆதரிக்கப்படாத "புகழ் பெற்ற மனிதர்கள்" மற்றும் "இராட்சதர்கள்" ஒரு புது இனம் உண்டாயிருந்தது. (ஆதியாகமம் 6:1-4) இன்றைக்கும் இப்படிப்பட்ட நிலைமையை நாம் பார்க்கிறோம். தீய மனப்பான்மையுள்ள மானிட மனதில் எந்த அளவுக்கு நுழைந்திருக்கிறதோ அந்த அளவுக்கு தீய நிலைமை (இராட்சத) பிரமாண்டமான அளவில் உண்டாயிருக்கிறது. முழு உலகிலும் எங்கேயாவது, கர்த்தரின் ஆவி மற்றும் சத்திய ஆவிக்கும் தொடர்புக்கு வந்தவர்களைக் காட்டிலும் அதிகமான அறிவுத்திறனை நாம் காணமுடிகிறதா? ஆனால் இந்த அறிவின் ஆவி தீய மனதில் நுழையும் போது, தீமை பயக்கிறது.

இந்த ஆவி புகழ் பெற்ற மனிதர்களையும் புத்திசாலித்தனம் உள்ள மனிதர்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் ஆச்சரியமான காரியங்களை செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். நமது காலத்தின் குறிப்பிடத் தகுந்த சாதனைகள், எல்லா வகையான ஆச்சரியமான கண்டுபிடிப்புகள் கர்த்தரின் ஆவி பூமிக்கு அனுப்பப்படாமல் சாத்தியமில்லை. ஆனால் இந்த இணைப்பின் பொதுவான போக்கு, தீய மனதில் அறிவின் ஆவி, இராட்சதர்களை உருவாக்கியிருக்கிறது. அவர்கள் தேசத்தில்"மேலேயும் கீழேயும்" நடக்கிறார்கள் அவர்கள் சர்க்கரை டிரஸ்டு (Sugar Trust) நிலக்கரி டிரஸ்டு (Coal Trust) முதலானவைகள் என்று அறியப்பட்டிருக்கிறார்கள். நோவாவின் நாட்களில் ராட்சதர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது போல, இப்போது நிலைமை ராட்சதர்களின் கட்டுப்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது இருந்ததைப் போல, இப்பொழுது ராட்சதர்கள் உலகம் முழுவதையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியவர்களாயிருக்கிறார்கள். ஜலப்பிரளயம் அந்த இராட்சதர்களை அழித்தது போல, இப்பொழுது மனுக்குலத்தை ஒடுக்குகிற டிரஸ்டுகள் மற்றும் வியாபார ஏஜென்சிஸ் மகா ஆபத்தில் மூழ்கடிக்கப்படும். அவர்கள் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள் என்று வாசிக்கிறோம். அவர்கள் திரும்பி எழும்பக்கூடிய நம்பிக்கையே இருக்காது.